**R 4901 (page 394)**

# விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்

## JUSTIFICATION BY FAITH

உரோமர் 5:1-ஆம் வசனத்தில், "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், தேவனுடனான நம்முடைய சமாதானம் அல்லது ஐக்கியமானது, நமது விசுவாசத்துடன் துவங்கி, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும், இராஜ்யத்தின் மகிமை, கனம் மற்றும் அழியாமைகுறித்த நம்பிக்கையில் களிகூருகிறவர்களாகவும், கிருபையினால் தேவனுடைய புத்திரர்களாகவும் நாம் நிற்கும் இந்நிலைக்கு, நம்மை வழிநடத்தியுள்ளது என்பதாக அவரது சிந்தனை காணப்படுகின்றது. விசுவாசத்தின் மூலமான நம்முடைய நீதிமானாக்கப்படுதல் என்பது நமது விசுவாசத்தில், முதலாவதாகத் துவங்கினது; அதாவது கர்த்தரை மங்கலாய் நாம் முதலாவது பார்த்தது முதலே துவங்கினது.

தேவனை நாம் முதலாவதாக அணுகினது முதற்கொண்டு, நாம் ஓரளவிற்குச் சமாதானம் பெற்றுக்கொள்ளத் துவங்கினோம்; இச்சமாதானமானது நாம் சரியான திசையில் தொடர்ந்து நடந்து, அறிவிலும் கீழ்ப்படிதலிலும் வளர்ந்துகொண்டிருப்பதுவரையிலும் தொடர்ந்து காணப்படும். யாருடைய விசுவாசம் அல்லது கீழ்ப்படிதல் நின்றுவிடுகின்றதோ, அவர்கள் தேவனோடு பெற்றிருந்த சமாதானம் குறைந்துபோவதைக் காண்பார்கள். ஒருவேளை முழுமையாய் அர்ப்பணம்பண்ணுவதற்கும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கும் ஏதுவாய் விசுவாசமும், கீழ்ப்படிதலும் வழிநடத்துமானால், அச்சமாதானமானது நம்முடைய இருதயங்களை ஆளும், "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமாக" மாறும் (பிலிப்பியர் 4:7). இவ்வசனம் பரிசுத்த ஆவியினால் பூரணப்படுத்தப்பட்ட சமாதானத்தைக் குறித்துத் தெரிவிக்கின்றது; இது தேவ சித்தத்திற்கு முழுமையாய் அர்ப்பணிப்பதன் விளைவாக வருகின்றதாகும்.

நம்முடைய சரீரங்களை ஜீவபலிகளாகக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க நாம் விரும்பும் கட்டம் வரும் அளவுக்கு விசுவாசமும், கீழ்ப்படிதலும் பெருகின பிற்பாடு, இப்பொழுது நாம் நின்றுகொண்டிருக்கும் இந்த முழு ஆசீர்வாதமான நிலைக்குள் நாம் பிரவேசித்தோம். ஆனால் பிரவேசிப்பதற்கு முதலாவதாக, நம்முடைய விசுவாசமானது மாபெரும் பிரதான ஆசாரியனால் உயிரூட்டப்பட வேண்டும்; இவர் நம்மைப் பூரணமாக்குவதற்கு அவசியமாய் இருக்கும் அளவுக்குள்ள, தம்முடைய பலியின் புண்ணியத்தினை நமக்குத் தரிப்பிக்கின்றார்; இரண்டாவதாக நாம் நம்முடைய பரம பிதாவினால் பலிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்; புதிதான ஜீவனுக்குப் பரிசுத்த ஆவியினால் நம்மை ஜெநிப்பிப்பதன்மூலம், நம்மை ஏற்றுக்கொண்டுள்ளதைத் தேவன் சுட்டிக்காண்பிக்கின்றார்.

உயிரூட்டப்படுதலே நீதிமானாக்கப்படுதலை முழுமையானதாகவும், மாற்றமுடியாததாகவும் ஆக்குகின்றது. யாருடைய நீதிமானாக்கப்படுதலானது உயிரூட்டப்பட்டுள்ளதோ, அந்நபர் கிறிஸ்துவின் புண்ணியத்தில் தனது முழுமையான பங்கினைப் பெற்றுக்கொண்டவர் ஆவார். இத்தகைய ஒரு நபர் பன்றி சேற்றிலே புரள திரும்புவதுபோன்று ஒருவேளை திரும்புவாரானால், அந்நபருக்கு மாபெரும் பாவ-நிவாரணத்தில் எந்த ஒரு பங்கும் மீதியிருப்பதில்லை. ஒருவன் புதிய சிருஷ்டியெனப் பூரணமடையத் தவறிப்போவானானால், அவனுக்கு "நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினை" மட்டுமே மிஞ்சும். (எபிரெயர் 10:27)

காரியத்தை உதாரணத்துடன் விவரித்துப்பார்ப்பதற்கு, தேவனோடு இசைவில் இல்லாத, ஆனால் தேவன்மீது ஆர்வம் அடைந்த ஒரு மனுஷன் காணப்படுகின்றான் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில் தேவன் அடையாளப்படுத்தப்படுகின்றார் என்பதை அம்மனுஷன் அடையாளங்கண்டுகொள்கின்றான். அவன் தேவனிடத்திற்கு நெருங்குகின்றான். அவன் ஆசரிப்புக்கூடாரத்தை நெருங்குகையில், பாளயத்திலிருந்து பிராகாரத்திற்கு வருவதற்கென வாசல் ஒன்று இருப்பதைக் காண்கின்றான். அந்த வாசலுக்குள் பிரவேசித்தப் பிற்பாடு, மீட்பரின் புண்ணியமான பலியினை அடையாளப்படுத்தும் வெண்கல பலிபீடத்தையும், அதன் பலிகளையும் காண்கின்றான். பலிபீடத்தைக் கடந்துசெல்வது என்பது, மீட்பின் வேலையில் வைக்கப்படும் விசுவாசத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. விசுவாசத்தின் நிலையாகிய "பிராகாரத்தின்" நிலைக்குள் அவன் பிரவேசித்தது முதற்கொண்டு, கீழ்ப்படிதலோடு அவன் ஒவ்வொரு அடியையும் எடுத்துவைக்கையில், அவனது விசுவாசமும் அதிகரித்து வருகின்றது. அடுத்து மரணபரியந்தம் உள்ள அர்ப்பணிப்பை அடையாளப்படுத்தும் முதலாம் திரை வருகின்றது. திரைக்குள்ளே கடந்து செல்லத்தக்கதாக, முழுமையான அர்ப்பணிப்பில் குனிந்து உள்ளே சென்றால், "என்னுடைய சமாதானத்தை உங்களுக்குக் கொடுக்கின்றேன்" என்று நமது கர்த்தர் கூறின முழுமையான அல்லது பரிபூரண சமாதானம் உண்டாகும். (யோவான் 14:27)

அவனது விசுவாசம் இனிமேலும் மீட்பருடைய வேலையின் மீதுள்ள விசுவாசமாக மாத்திரம் காணப்படுவதில்லை; இதைவிட அதிகமாகி, "தேவனுடைய அன்பின் ஈவாகிய சமாதானமாகுகின்றது;" அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதும், அவனது இருதயத்தை ஆளும் எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமாக மாறுகின்றது. ஆனால் ஒருவேளை பூமிக்குரிய நலன்கள் அனைத்தும் பலிசெலுத்தப்படுவதை அடையாளப்படுத்தும் முதலாம் திரையை நெருங்கின பிற்பாடு, இந்தப் படியில் அடியெடுத்து வைக்கப்படவில்லையெனில், சமாதானம் குறைவதே விளைவாகக் காணப்படும்; இன்னுமாக வாசலை நோக்கி, உலகத்தை நோக்கிப் பின்செல்லுவதற்கும் வாய்ப்பு இருக்கும்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம்கொண்டிருப்பதன்மூலம் இப்பொழுது நீதிமானாக்கப்படுதலுக்கும், இன்னுமாக ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டார்கள் என்று கூறப்பட்டுள்ள முற்பிதாக்களின் நீதிமானாக்கப்படுதலுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் பின்வருமாறு: முற்பிதாக்கள் தங்களது விசுவாசம் உயிரூட்டப்பட முடியாத காலக்கட்டத்தில் வாழ்ந்தார்கள்; ஆகையால் தெய்வீக அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தையும், அவர்கள் அனுபவித்த அறிவின் அளவிற்கேற்ப எதிர்காலத்திற்கென்று மேன்மையானதொரு நம்பிக்கையையும் அடைவதைக்காட்டிலும், அதிகமான யாதொன்றையும் அவர்களால் பெறமுடியவில்லை. மீட்பர் மூலமாய்த் தவிர மற்றபடி அவர்களால் உண்மையில் நித்திய ஜீவனை ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது; ஆகையால் நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தை மட்டும் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். மீட்பர் தம்முடைய புண்ணியத்தை உலகத்திற்குச் செயல்படுத்தும்போதே, அவர்களது முழுமையான நீதிமானாக்கப்படுதல் கடந்துவரும்.

---